# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## காயல்பட்டணம்

## கல்லூரி மாணவ மாணவியருக்கான பேச்சுப்போட்டி

மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவிகள்

தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மை ஆணையம் நடத்திய அனைத்துக் கல்லூரி மாணவ மாணவியருக்கான பேச்சுப்போட்டி 22.03.2022 அன்று தூத்துக்குடி வ.உ.சி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து ஆங்கிலப் பேச்சுப்போட்டிக்கு இளங்கலை இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி செ.மு.அ. முஹம்மது அஃபரா, அ.க. பாத்திமா அப்ஃரா மற்றும் தமிழ் பேச்சுப்போட்டிக்கு இளங்கலை இரண்டாமாண்டு வணிக செயலாற்றியல் மாணவி ர. காவியா, இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி எ. ஆஸ்மியும் கலந்து கொண்டனர்.

ஆங்கில பேச்சுப்போட்டியில் மாணவி செ.மு.அ. முஹம்மது அப்ஃரா இரண்டாமிடத்தையும், தமிழ் பேச்சுப்போட்டியில் மாணவி எ.ஆஸ்மி மூன்றாமிடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவியருக்கு சென்னை, குருநானக் கல்லூரி கலையரங்கத்தில் 03.06.2022 அன்று மாலை 5.00 மணியளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவி செ.மு.அ.முஹம்மது அப்ஃராவுக்கு 10,000 ரூபாய், எ.ஆஸ்மிக்கு 5000 ரூபாய் பரிசும் சான்றிதழும் வழங்கினார். இவ்விழாவில் தமிழக அமைச்சர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற நம் கல்லூரி மாணவியர்களை கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யிது அப்துர் ரஹ்மான், கல்லூரிச் செயலர் வாவு M.M. மொகுதஸீம் B.A (CS), கல்லூரி துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), கல்லூரி இயக்குநர் முனைவர். மெர்சி ஹென்றி M.A., Ph.D. மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT அவர்கள் பாராட்டினார்.